# தேசிய மறுமலர்ச்சி

## இந்திய தேசிய இயக்கம்

Copy Right @ Best Learning Centre

First Edition January 2020

All Rights Reserved

# தேசிய மறுமலர்ச்சி

## அறிமுகம்:

- பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பாதியில் ஐரோப்பியர்கள் இந்தியத் துணைத் கண்டத்தின் மீது தங்கள் அரசியல் அதிகாரத்தை நிறுவினர்
- பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இந்தியாவை இணைப்பதில் அக்கறை செலுத்திய அவர்கள் இந்தியச் சமூகத்தை மறு ஒழுங்கமைவு செய்தனர். இந்நிலை இந்தியர்களிடையே எதிர்விளைவினை ஏற்படுத்தியது.
- நவீன இந்தியாவின் சமய, சமூக சீர்திருத்த இயக்கங்களுக்கு வழிகோலியது. இக்குறிப்பிட்ட வரலாற்று வளர்ச்சி நிகழ்வு “இந்திய மறுமலர்ச்சி” என அடையாளப்படுத்தப்பட்டது. பண்பாட்டுப் புதுவசந்தம், மறுமலர்ச்சி என அறியப்பட்டுள்ளது. "மறுமலர்ச்சி" என்பதைக் குறிக்கும் ஆங்கில சொல்லான Renaissance’ என்பது ’மறுபிறப்பு’ எனப்பொருள்படும்.

## தமிழ் மறுமலர்ச்சி:

- காலனியத்தின் பண்பாட்டு ஆதிக்கமும் மனிதநேயத்தின் எழுச்சியும் இந்தியத் துணைக் கண்டத்தின் சமூகப் – பண்பாட்டு வாழ்வில் பல மாற்றங்களைக் கொண்டு வந்தது.



- நவீன தமிழ்நாடும் அத்தகைய வரலாற்று மாற்றத்தை அனுபவித்தது.
- தமிழ் மொழி மற்றும் கலாச்சாரம் அவர்களின் அடையாள கட்டுமானத்தில் குறிப்பிடத்தக்க பங்கைக்கொண்டிருந்தன .

**<u>தனித்தமிழ் இயக்கம்:</u>**

- வேதாச்சலம் என்ற தனது பெயரை அவர் தூய தமிழில் மறைமலை அடிகள் என மாற்றிக்கொண்டார்.
- அவருடைய ஞானசாகரம் எனும் பத்திரிக்கை அறிவுக்கடல் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- அவருடைய சமரச சன்மார்க்க சங்கம் எனும் நிறுவனம் பொது நிலைக்கழகம் என்று பெயரிடப்பட்டது.

**<u>திராவிட இயக்கத்தின் எழுச்சி:</u>**

- 1909இல் பிராமணர் அல்லாத மாணவர்களுக்கு உதவி செய்வதற்காக மதராஸ் பிராமணரல்லாதோர் சங்கம் என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது.
- 1912இல் டாக்டர் சி. நடேசனார் எனும் மருத்துவர் மதராஸ் ஐக்கிய கழகம் எனும் அமைப்பை உருவாக்கினார்



டாக்டர்
சி. நடேசனார்

- திருவல்லிக்கேணியில் ஜூலை 1916இல் திராவிடர் இல்லம் என்ற பெயரில் ஒரு தங்கும் விடுதியை நிறுவினார் .

**<u>சுயமரியாதை இயக்கம் -1925:</u>**

- சுயமரியாதை இயக்கம் (Self Respect Movement ) சடங்குகளும் சம்பிரதாயங்களும் இல்லாத சாதிகளற்ற பிறப்பின் அடிப்படையிலான பாகுபாடற்ற ஒரு சமூகத்தை இவ்வியக்கம் ஆதரித்தது.



- இவ்வியக்கம் பெண் விடுதலை கோருதல், மூடநம்பிக்கைகளை நீக்குதல் மற்றும் பகுத்தறிவு வலியுறுத்தல் போன்ற கோரிக்கையை கோரியது.
- இவ்வியக்கம் இந்துக்களின் நலன்களுக்காகவும் இஸ்லாமியர் நலன்களுக்காகவும் போராடியது.

**இந்திய விடுதலைக்கு முன்பு மொழிப் போராட்டம் :**

- மறைமலை அடிகளின் தனித்தமிழ் இயக்கம், பெரியாரின் மொழிச் சீர்திருத்தம் மற்றும் தமிழிசை இயக்கம் ஆகியவை தமிழுக்கு வலுச்சேர்த்தன .
- ஆபிரகாம் பண்டிதர் தமிழ் இசை வரலாற்றை முறையாகக் கற்றாய்ந்து, பழந்தமிழர் இசை முறையை மீட்டுருவாக்கம் செய்ய முயன்றார் .
- 1912இல் தஞ்சாவூர் 'சங்கீத வித்யா மகாஜன சங்கம்' என்ற அமைப்பை ஏற்படுத்தினார் .
- தமிழிசையின் நிலை குறித்து விவாதிக்க 1943இல் முதல் தமிழிசை மாநாடு நடத்தப்பட்டது.